# விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்

## Student Organization of Liberation Tigers

SOLT (U.K.)

SOLT (U.K.)

**(SOLT, BM BOX 3694, LONDON WC1 N3XX)** 0069


## தமிழீழத்தின் நாளாந்த நிகழ்வுகள் 23/5/86..கிழமை(19)

******************

17-5-86

சிறிலங்காவின் முப்படைகளும் இன்று 17-5-86 அன்று யாழ் குடாநாட்டில் திட்டமிட்டபடி தாக்குதலில் இறங்கினர். வடக்கில் உள்ள பல இராணுவ முகாம்களில் இருந்து ஆயிரக்கணக்கான சிங்களத் துருப்புக்கள் வெளியேறி கிராமங்கள் நகரங்களைச் சுற்றி வளைக்க முயன்றனர். ஆகாய விமானங்களும், கடற்படை போர்க்கப்பல்களும் குண்டுகள் பொழிந்து தரைப்படைக்கு உதவின. விடுதலைப்புலிகளின் பல கெரில்லா அணிகள் பல அரங்குகளில் எதிரியை எதிர்கொண்டு சமரில் ஈடுபட்டுள்ளனர். இன்று காலை 9 மணியளவில் ஆயிரக்கணக்கான கூலிப்படைகள் கனரக ஆயுதங்கள், பீரங்கிகள் சகிதம் கவச வாகனங்களில் இராணுவ முகாம்களில் இருந்து கிளம்பினர். யாழ்ப்பாணக் கோட்டை, பலாலி, நாவற்குழி, ஊர்காவற்றுறை, ஆனையிறவு, கிளிநொச்சி ஆகிய இராணுவ முகாம்களிலிருந்து புறப்பட்ட சிங்கள இராணுவத்தினரை விடுதலைப்புலிகளின் படை அணிகள் எதிர் கொண்டு தாக்கினர். இதனையடுத்து எம்மவர்களுக்கும், இராணுவத்தினருக்குமிடையில் கடும் சண்டை மூண்டது. ஊர்காவற்றுறையில் கப்பல்களில் வந்து தரையேற முயற்சித்த கடற்படையினர் மீது விடுதலைப்புலிகள் தமது அதிரடித்தாக்குதலை மேற்கொண்டனர். விடுதலைப்புலிகளின் மூர்க்கத்தனமான தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாத கடற்படையினர் பின் வாங்கிச் சென்றனர். இத்தாக்குதலின் போது இரு விடுதலை வேங்கைகள் வீர மரணமடைந்துள்ளனர் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத் தருகிறோம்.

சிறிலங்கா நாசகாரச் செயலை நாம் முன் கூட்டியே அறிந்து பொதுமக்களை உசாராக இருக்கும்படி கோரி விடுதலைப்புலிகள் கடந்த 3 நாட்களாக யாழ் குடா நாடெங்கும் பல கருத்தரங்களை நடத்தியும் பல துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டும், தமிழ் மக்களை பதுங்கு குழிகளை அமைத்து தற்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கூறியிருந்தனர்.

18-5-86

நேற்று யாழ் குடாநாட்டில் உள்ள முகாம்களில் இருந்து புறப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் இதுவரை மீள முகாம்களிற்கு திரும்பாது தரித்த இடங்களிலேயே நின்று தமது அட்டூழியங்களை மேற்கொண்ட வண்ணம் உள்ளனர். விடுதலைப்புலிகளும் அவர்களைத் தாக்கிய வண்ணம் உள்ளனர். இன்று நண்பகல் 2 மணியளவில் வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து முன்னேறிய இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாத இராணுவத்தினர் பின்வாங்கி முகாமுக்குள் சென்று அங்கிருந்து தாக்குதல்களை மேற்கொண்ட வண்ணமுள்ளனர். ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து 28 கனரகவாகனங்களில் யாழ் குடாநாட்டிற்கு நுழைய முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் எதிர்த்தாக்குதல் நடத்தியபடி இருக்கிறார்கள். காங்கேசன்துறை இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் எதிர் கொண்டு தாக்கியபோது 200க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் புகையிரதப்பாதையில் பதுங்கியுள்ளனர். தொடர்ந்தும் விடுதலைப்புலிகள் இவ் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தியவண்ணம் உள்ளனர். பலாலி இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் RPG, கிரனைட்டர் போன்றவை கொண்டு மிக கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டவண்ணம் உள்ளனர். புலிகளின் மூர்க்கமான தாக்குதல்களினால் இம்முகாமிலுள்ள இராணுவத்தினருக்கு பலத்த சேதமும், உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ளது.

நேற்றைய தினம் ஊர்காவற்றுறையில் தரையிறக்க முற்பட்ட சிங்களப்படைகள் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் மேற்கொண்ட பொழுது கூலிப்படைகட்கு பலத்த சேதம் ஏற்பட்டதுடன், ஹெலிகொப்டர் ஒன்றும் பலத்த சேதத்திற்கு உள்ளாகி தரையிறக்கப்பட்டது. நேற்றைய தினம் கிளிநொச்சியில் இருந்து புறப்பட்ட இராணுவத்தினர் மீது யக்கச்சி என்ற இடத்தில் வைத்து விடுதலைப்புலி வீரர்கள் எதிர் தாக்குதல் மேற்கொண்டதில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

பண்ணைப்பாலத்தடியில் வைத்து விடுதலைப்புலிகள் இராணுவத்தினரை சுற்றிவளைத்து தாக்குதல் மேற்கொண்டதில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணப் பகுதியில் மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் முகமாக விடுதலைப்புலிகள் வீதித்தடைகளைப் போட்டும், மண்மூடைகளை வைத்து பதுங்கு குழிகளை அமைத்தும், மக்களிற்கு பாதுகாப்பு அளித்து வருகிறார்கள். இவ் சிங்கள முப்படைகளின் தாக்குதல்கட்கு விடுதலைப்புலி வீரர்கள் மட்டுமே எதிர்தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

...களை இராணுவத்தை எதிர்த்து ஓய்வின்றி, உறக்கமின்றி எதிர்த் தாக்குதல்களை வீராவேசத்துடன் ...த்திக் கொண்டிருக்கும் விடுதலைப்புலி வீரர்கட்கு குளிர்பானங்கள், உணவு வகைகளை தமிழ் மக்கள் ...ங்கிக் கொண்டிருக்கின்றனர்.

[illegible]-5-86

...ந்த 3 நாட்களாக சிறிலங்கா இராணுவத்தினர்க்கும், விடுதலைப்புலிகளிற்கும் இடையில் நடந்...ம் போரில் 50 க்கும் மேற்பட்ட சிங்களக் கூலிப்படைகள் பலியாகியுள்ளனர். விடுதலைப்புலிகளின் ...க்குதல்களினால் பெரிதும் பாதிப்புக்குள்ளான சிறிலங்கா இராணுவம் ஆனையிறவு, பலாலி, யாழ் ...ாட்டை, வல்வெட்டித்துறை போன்ற முகாம்கட்கு பின்வாங்கிச் சென்றனர். கடந்த 3 தினங்களாக ...ந்த போரில் 50 க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டும், 4 கவச வாகனங்கள் ...ழிக்கப்பட்டும், கெலிக்கொப்டர் ஒன்றும் சேதமாக்கப்பட்டது. எமது தரப்பில் 8 இளம் வீர ...வங்கைகளை நாம் இழந்துள்ளோம். இவர்களுக்கு எமது வீர வணக்கத்தைத் தெரிவிக்கின்றோம்.

ஆனையிறவு இராணுவமுகாமில் இருந்து புறப்பட்ட இராணுவத்தினரை, எம்மவர்கள் கொடிகாமத்தில் வைத்து, . . . . தாக்குதல் நடத்தியதில் 2 கவச வாகனங்கள் சேதமாக்கப்பட்டதுடன் பல இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர். வல்வெட்டித்துறை முகாமிலிருந்து புறப்பட்ட 150 க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் மீது எம்மவர்கள் மேற்கொண்ட தாக்குதலில் 7 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பலர் படு காயமடைந்துள்ளனர். இத் தாக்குதலை சமாளிக்க முடியாத இராணுவத்தினர் பின்வாங்கி முகாமுக்குள் சென்று விட்டனர். பலாலி இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட 100க்கும் அதிகமான இராணுவத்தினர் வசாவிளான் மகாவித்தியாலயத்தில் நிலை எடுத்திருந்த பொழுது விடுதலைப்புலிகள் அவர்களைச் சுற்றி வளைத்துத் தாக்குதல் நடத்திய வண்ணமுள்ளனர். இவ் இராணுவத்தினருக்கு பாதுகாப்பு கொடுக்கவென பலாலி முகாமில் இருந்து புறப்பட்ட இராணுவத்தினரை வழிமறித்து எம்மவர்கள் தாக்கியதில், ஒரு கவச வாகனம் அழிக்கப்பட்டும், பல இராணுவத்தினர் கொல்லப்பட்டும் உள்ளனர். இவர்கள் எம்மவரின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் பின் வாங்கி முகாமுக்குள் சென்று விட்டனர்.

ஒரு புறத்தில் யாழ் குடாநாட்டை அரச முப்படைகளும் தாக்கியழிக்க முற்படும் அதே வேளை, மறு புறத்தில் சிறிலங்கா அரசானது சில போலி அமைப்புக்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த இரகசியமாக ஏற்பாடுகளை செய்து வருவதாக விடுதலைப்புலிகளின் இரகசிய அமைப்புக்கள் தகவல் சேகரித்துள்ளன. அடுத்து வரும் இரண்டு, மூன்று தினங்களில் சிறிலங்கா அரசின் ஒரு பிரிவும், PLOT இயக்கத்தின் உமாமகேஸ்வரனும் சுவிர்சலாந்தில் சந்தித்து இரகசிய பேச்சுவார்த்தைகள் நடத்த இருப்பதாக அறியப்படுகிறது. தமிழீழ போராட்டத்திற்கு என்று சென்ற பல இளைஞர்களை படு கொலை செய்தார் என்றும், தமிழீழ போராட்டத்திற்காக வெளிநாட்டில் உள்ள தமிழீழ மக்களால் கொடுக்கப்பட்ட நிதியில் 3 மில்லியன் டொலர்களை தனது தனிப்பட்ட உடமையாக்கிக் கொண்டார் என அவரது இயக்க அங்கத்தவர்களால் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் உமாமகேஸ்வரன் இன்று தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை முறியடிக்கும் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவது மன்னிக்க முடியாத பெரும் துரோக நடவடிக்கை என்பதை தமிழீழ மக்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

20-5-86

வசாவிளான் மகாவித்தியாலயத்தில் அகப்பட்ட 100க்கும் அதிகமான சிங்கள இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்திய வண்ணம் உள்ளனர். வல்வெட்டித்துறையில் உள்ள இராணுவத்தினர்க்கு உதவுமுகமாக வந்த கடற்படைப்படகுகள் மீது விடுதலைப்புலி வீரர்கள் அதி நவீன ஆயுதங்கள் கொண்டு தாக்கியதில் 10 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ராக்கெட் தாக்குதலில் ஒரு மூழ்கடிக்கப்பட்டதுடன் மற்றுமோர் படகு பலத்த சேதத்திற்குள்ளானது. இதே வேளை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கும்புறுமூலை இராணுவமுகாமிலிருந்து ஜீப்பிலும், கவசவாகனங்களிலும் புறப்பட்ட அதிரடிப்படையினர் மீது, முகாமிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் விடுதலைப்புலிகளால் கண்ணி வெடித்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் ஒரு ஜீப் வண்டி முற்றாக சேதமாக்கப்பட்டதுடன் 5 கூலிப்படைகள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் ஏற்பட்ட துப்பாக்கி சமரில் 7 கூலிப்படைகள் படுகாயமடைந்துள்ளனர்.

21-5-86

இன்று 21-5-86 காலை வல்வெட்டித்துறை இராணுவ முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்களும், கெலிக்கொப்டர்களும் பாரிய தாக்குதலை மேற்கொண்டன. குண்டு வீச்சு விமானங்களிலிருந்து 30 குண்டுகள் வரை போடப்பட்டன. இத்தாக்குதல்களினால் 10 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன. இதன்போது பொது மக்கள் எவரும் கொல்லப்படவில்லை.

21-5-86 அதாவது இன்று காலை 9 மணியளவில் ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து 20 வாகனங்களில் 100க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கடற்கரையோரமாக வந்த பொழுது மண்டலாய்காடு ...மிடத்தில் விடுதலைப் புலிகளினால் வழிமறிக்கப்பட்டு, தாக்குதல் மேற்கொள்ளப்பட்டவண்ணம் உள்ளது.

...லங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளரும் கலவானை தொகுதி பாராளுமன்ற உறுப்பினருமான ...் முத்தட்டுவேகம அவர்கள் அகால மரணமடைந்ததையிட்டு தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் ...வே.பிரபாகரன் அவர்களால் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையகத்திற்கு ஓர் அனுதாபச் ...ய்தி அனுப்பப்பட்டுள்ளது.

# விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்

## Student Organization of Liberation Tigers

SOLT (U.K.)

SOLT (U.K.)


(SOLT, BM BOX 3694, LONDON WC1 N3XX) 0070

22-5-86

நேற்றைய தினம் வல்வெட்டித்துறைப்பகுதியில் குண்டு வீச்சில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது எம்மவர்கள் நடத்திய தாக்குதலினால் அவர்கள் பின்வாங்கியதுடன் அவர்கள் தரப்பில் பலத்த சேதமும் ஏற்பட்டுள்ளது. இதனால் கடும் ஆத்திரமடைந்த இராணுவத்தினர் இன்று அதாவது 22-5-86 காலை யாழ் மாவட்டத்திலுள்ள செம்பியன்பற்று என்னுமிடத்துக்கு 2 குண்டு வீச்சு விமானங்கள், 4 ஹெலிக்கொப்டர்கள், 2 கடல் விமானங்கள் சகிதம் வந்து அப்பகுதியில் பாரிய குண்டு வீச்சுத்தாக்குதலையும், துப்பாக்கிப்பிரயோகமும் செய்தனர். இத்தாக்குதல்களினால் 2 குழந்தைகள் உட்பட 4 அப்பாவித் தமிழ்ப் பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். பல வீடுகள், கடைகள் முற்றாக சேதமடைந்துள்ளன. ஸ்தலத்திற்கு விரைந்த தமிழீழ விடுதலைப்புலிகள் அரச படைகளை எதிர்த்து தாக்குதல் நடத்தினர். மேலதிக விபரம் கிடைக்கவில்லை.

நேற்று ஆனையிறவு முகாமிலிருந்து வந்த இராணுவத்தினருக்கும் எம்மவருக்கும் இடையில் மட்டலாய் காடு என்ற இடத்தில் கடும் சண்டை மூண்டது. இத்தாக்குதலானது இப்போதும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எம்மவர்கள் அரச கூலிப்படைகளை வாடியடி என்னுமிடம்வரை பின்வாங்கச் செய்துள்ளனர். இத்தாக்குதலில் இராணுவத்தினர் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. தொடர்ந்தும் தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் மேலதிக விபரம் கிடைக்கவில்லை.

23-5-86

யாழ் கோட்டை இராணுவ முகாமிலிருந்து வெளியே வந்த பல நூறு இராணுவத்தினரை தமிழீழ விடுதலைப்புலிகளின் கெரில்லா அணிகள் முகாமிற்கு அருகிலுள்ள பொலிஸ் நிலைய விடுதிக்குள் துரத்தி விடுதியைச்சுற்றி வளைத்து தாக்குதல் நடத்துகின்றனர். நேற்று இரவு 7 மணியளவில் யாழ்கோட்டை இராணுவ முகாமிலிருந்து பல நூறு இராணுவத்தினர் அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடாத்தும் நோக்குடன் கனரக வாகனங்களில் வெளியே வந்த போது ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விடுதலைப்புலிகளின் கெரில்லா அணிகள் தாக்குதலை ஆரம்பித்தனர். எம் வீரர்களின் தாக்குதலை சமாளிக்க முடியாத சிங்கள இராணுவத்தினர் பின்வாங்கி யாழ் பொலிஸ் நிலைய விடுதிக்குள் பதுங்கினர். இக்கட்டிடமானது 10-4-85 தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ் பொலிஸ் நிலைய தாக்குதலில் மிஞ்சிய ஒரு பகுதியாகும். விடுதலைப்புலிகள் அக்கட்டிடத்தை சுற்றி வளைத்து இராணுவத்தினர் வெளியே வரமுடியாதவாறு தாக்குதலை நடத்துகின்றனர். இத்தாக்குதல்களின் போது சிங்கள இராணுவத்தின் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ள போதிலும் இராணுவத்திற்கு எதிராக பல முனைகளிலும் புலிகளின் தாக்குதல்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் முழுமையான சேத விபரங்கள் கிடைக்கவில்லை.

நேற்றைய தினம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள புல்லுமலை என்ற கிராமத்தை சிங்கள காடையர் சுற்றிவளைத்து அப்பாவிமக்கள் மீது மிருகத்தனமான தாக்குதலை நடத்தியும் அம்மக்களின் உடமைகளையும் சேதமாக்கியுள்ளனர். 200க்கும் மேலான வீடுகளும் கடைகளும் இவர்களால் முற்றாக சேதமாக்கப்பட்டுள்ளன. 15 அப்பாவித் தமிழர்கள் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளனர். பல பெண்களும் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர். தற்போது அக்கிராமத்திலுள்ள 500க்கும் அதிகமான தமிழ்க் குடும்பங்கள் அகதிகளாக்கப்பட்டு அயற் கிராமங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

---

**தமிழீழத்தில் நடைபெறும் சம்பவங்கள் பற்றிய ஊர்ஜிதப்படுத்தப்பட்ட செய்திகளுக்கு "தமிழீழ விடுதலைப் புலிகளின் குரல்" செய்திச் சேவையுடன் தொடர்பு கொள்ளவும்.**

**தொலைபேசி இல. 01-475 0543**

# விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்

## Student Organization of Liberation Tigers

SOLT (U.K.)

SOLT (U.K.)



**(SOLT,BM BOX 3694,LONDON WC1 N3XX)**


0085

<u>தமிழீழத்தின் நாளாந்த நிகழ்வுகள்.</u>

<u>கிழமை (24)</u>

20/6/86

நேற்று முல்லைத்தீவில் விடுதலைப்புலிகளுக்கும் ராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் தலைமை தாங்கி வந்த ராணுவ உயர் அதிகாரி உட்பட 3 பேர் பலத்த காயத்திற்கு உள்ளானார்கள். இத்தாக்குதலின் பின்பு ராணுவத்தினர் பொதுமக்கள் சிலரை பிடித்துச் சென்று அவர்களிடம் பின்வருமாறு கூறி எம்மவரிடம் தூது விட்டுள்ளனர். "நாங்கள் புதியவர்கள் எங்களை ஒன்றும் செய்ய வேண்டாம் என்றும் எங்களுக்கும் பிள்ளைகள் இருக்கிறார்கள் எனவும் தாங்கள் உயிருடன் திரும்பிப் போக விரும்புகின்றோம் என்றும் அழுதபடி மிகக் கவலையோடு பிடித்த பொதுமக்களுக்கு விளக்கி எம்மவரிடம் எடுத்துச் சொல்லும்படி கூறிவிட்டனர்!
மன்னார் உயிலங்குளம் என்ற இடத்தில் பல கவச வாகனங்களில் ராணுவத்தினர் வந்து இறங்கியுள்ளனர். இவர்களிடம் 2 ஈரோஸ் இயக்கத்தினர் அகப்பட்டுள்ளனர். ராணுவத்தின் வருகையையறிந்த எம்மவர்கள் அவர்களைத் தாக்கும் நோக்குடன் அவ்விடத்திற்கு விரைந்து கொண்டிருக்கின்றனர்.
சிறிலங்கா பாசிச அரசுக்கு உதவிகள் வழங்கும் நாடுகள் பாரிஸில் நடைபெற்ற கூட்டத்தில் 703 மில்லியன் டொலர்களை உதவியளிப்பதற்கு முடிவு செய்துள்ளனர்.

21/6/86

இன்று நண்பகல் 1.30 மணியளவில் கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் குண்டு வீசிய சிறிலங்கா அரசின் குண்டு வீச்சு விமானங்களை விடுதலைப்புலிகள் கனம் கூடிய இயந்திரத் துப்பாக்கிகள் கொண்டு தாக்கி விரட்டியுள்ளனர்.
19/6/86 அன்று இந்தியா நோக்கி சென்று கொண்டிருந்த தமிழ் அகதிகள் படகொன்று சிறிலங்கா கடற்படையின் ரோந்து படகொன்றினால் வழிமறிக்கப் பட்டு சிறிலங்கா கடற்படையினர் இருவர் அப்படகில் ஏறி அகதிகள் படகினை கடற்படையினரின் ரோந்துப் படகினைத் தொடருமாறு உத்தரவிட்டனர். படகு பின் தொடர்ந்து கொண்டிருக்கையில் அப்படகில் சென்றவர்கள் எல்லோரும் சேர்ந்து இரு கடற்படையினரையும் தாக்கி அவர்களிடம் இருந்த துப்பாக்கிகளைப் பறித்து முன் சென்ற கடற்படைப் படகை விரட்டி விட்டு அகதிகள் படகுடன் திருக்கேதீஸ்வரக் கரையையடைந்து அவ்விடத்தில் உள்ள விடுதலைப்புலிகளின் முகாமில் துப்பாக்கிகளை ஒப்படைத்து விட்டு விடுதலைப்புலிகளின் பாதுகாப்பில் உள்ளனர்.

22/6/86

இன்று காலை 4மணியளவில் வசாவிளான் ராணுவமுகாமில் இருந்து ஏராளமான ராணுவத்தினர் யாழ் நகரை நோக்கி முன்னேறத் தொடங்கினர். இவர்கள் முகாமில் இருந்து புறப்பட்ட சிறிது தூரத்தில் எம்மவர்களினால் சுற்றி வளைக்கப்பட்டனர். எம்மவர்களின் தாக்குதலில் பல ராணுவத்தினர் கொல்லப்பட்டும் பலர் படுகாயமடைந்துமுள்ளனர். இதே வேளையில் வசாவிளான் ராணுவ முகாம் மீதும் எம்மவர்கள் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். இத் தாக்குதலில் எமது உதவியாளரான முருகேசு என்பவர் வீரமரணம் அடைந்துள்ளார் என்பதனை ஆழ்ந்த கவலையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.
திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த பாரதியார்புரம், புளியங்குளம், செல்வநாயகபுரம், அன்புவழிபுரம் ஆகிய இடங்களை ராணுவத்தினர் சுற்றிவளைத்து 75 அப்பாவி ஆண்களை கைது செய்துள்ளனர்.

23/6/86

நேற்று பரந்தன், முறிகண்டி ஆகிய இடங்களில் 2 குண்டு வீச்சு விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன. சேத விபரம் தெரியவில்லை.
நேற்று காலை 10மணியளவில் வசாவிளான் முகாமில் இருந்து வெளியேற முற்பட்ட ராணுவத்தினர் மீது எம்மவர்கள் மேற்கொண்ட தாக்குதலையடுத்து ராணுவத்தினர் முகாமுக்குள் பின் வாங்கி விட்டனர்.
இன்று காலை நாவற்குளி முகாமில் இருந்து வெளியேற முற்பட்ட ராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ராணுவ தரப்பில் சுமணபால என்பவர் கொல்லப்பட்டார். மேலும் இருவர் காயமடைந்துமுள்ளனர்.

19/6/86 அன்றிரவு இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்த 25பேர் கொண்ட அகதிகள் படகு
ஒன்றை இலங்கை கடற்படையினர் மறித்து அதில் வந்த 25பேரையும் வெட்டிக்கொன்றுள்ளனர்.
இவர்களில் 5 பேரது உடல்கள் மன்னார் கரையில் ஒதுங்கியுள்ளன.அத்துடன் இவர்கள் பிரயாணம்
செய்த றோளர் கடலில் தாண்ட நிலையில் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.
24/6/86
--------

தினத்தந்திச் செய்திகளின்படி தமிழீழவிடுதலைப்புலிகள் தமிழ் மக்களது மறுக்கப்பட்ட உரிமைக்காக
வே போராடி வருகிறார்கள்.எனவே விடுதலைப்புலிகளின் இந்தப் போராட்டம் நியாயமானதே.
இவ்வாறு தமிழகம் வந்துள்ள இலங்கை நடிகர் விஜயகுமாரதுங்கா கூறியுள்ளார்.மேலும் அவர் கூறு
கையில் வெளிநாட்டு உதவிகள் மூலம் விடுதலைப்புலிகளுடன் வடமாநிலத்தில் போராடி அவர்களை
ஒழித்துக் கட்டுவோம் என்று இலங்கையரசின் பாதுகாப்பமைச்சர் லலித் அத்துலத்முதலியும் இலங்கை
யரசும் கூறி வருகின்றனர்.
இதனால் ஒருபோதும் விடுதலைபபுலிகளை அழித்து விடமுடியாது என்று கூறியுள்ளார்.

கொள்கைகளுக்காக உறுதியாகப் போராடுபவர்களே விடுதலைப்புலிகள்.அவர்களை முதன்முதலாகச்
சந்தித்தோம்.அவர்கள் கொடூரமானவர்கள் இல்லை என்பதை உணர்ந்தோம்.விடுதலைப்புலிகள் நல்லவ
ர்கள்.அவர்கள் கொள்கைகளுக்காக உறுதியாகப் போராடுகிறார்கள் இவ்வாறு விஜயகுமாரதுங்காவின்
மனைவியும் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் கடைசி மகளுமான சந்திரிகா கூறியுள்ளார்.
விடுதலைப்புலிகளை ஒழிக்க வெளிநாடுகளில் இருந்து ஆயுதம் வாங்கிக் குவிப்பது உண்மையென்று
ஜே.ஆர்.ஜெயவர்தனா கூறியுள்ளார்.குறிப்பாக பாகிஸ்தானிடம் இருந்து பெருமளவு ஆயுதங்களை வாங்
குவதாக கூறிய அவர் இந்த ஆயுதக் குவிப்பை மறைக்க தாம் விரும்பவில்லையென்றும் மேலும் கூறியுள்
ளார்.

25/6/86

---------

இன்றைய இந்திய மாலை செய்திகளின்படி திருமலையில் பஸ் வண்டியொன்று கண்ணிவெடியில் சிக்கியதா
ல் அப்பஸ்ஸில் பயணம் செய்தவர்களில் 16 பேர் உயிரிழந்தனர் என்றும் இக்கண்ணி வெடித்தாக்குதல்
சம்பவமானது ஜெயவர்தனாவால் கூட்டப்பட்ட ஐ.தே.கட்சி மகாநாடு ஆரம்பமாவதற்கு ஒரு மணி
நேரம் முன்பாக நடைபெற்றது என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.
திருமலையில் இடம்பெற்ற மற்றுமொரு கண்ணிவெடித் தாக்குதல் சம்பவத்தில் 7 கொமாண்டோப்
பொலிசார் காயமடைந்துள்ளனர்.
மேலும் வவுனியா மாவட்டத்தில் இடம்பெற்ற மற்றுமொரு கண்ணிவெடித்தாக்குதலில் பஸ்ஸில் பிரயாண
ம் செய்த பலர் படுகாயமடைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.
26/6/86
--------

திருமலை மாவட்டத்தில் உள்ள இரக்கங்கட்டி முகாமிலிருந்து புறப்பட்ட நூற்றுக்கு அதிகமான ராணு
வத்தினரை ஆலங்கட்டை என்னுமிடத்தில் வைத்து எம்மவர்கள் தாக்கினர்.4மணி நேரமாக தாக்குதல்
நடைபெற்றது.3ம் கட்டை முகாமிலிருந்து புறப்பட்ட ராணுவத்தினரை அலெக்ஸ் தோட்டம் என்னுமி
டத்தில் வைத்து எம்மவர்கள் தாக்கினர்.இவ்விரு இடங்களிலும் எம்மவர்களின் தாக்குதல்களுக்கு ஈடு
கொடுக்க முடியாத ராணுவத்தினர் முகாமுக்குப் பின்வாங்கினர்.இத்தாக்குதல்களில் 10க்கு மேற்ப
ட்ட ராணுவத்தினர் உயிரிழந்தும் பலர் படுகாயமடைந்துமுள்ளனர்.மேலும் ஆகாயத்திலிருந்து ஹெலி
கொப்டர் மூலம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் எம்மவரில் ஒருவரான செல்வம் என்
பவர் வீர மரணம் அடைந்துள்ளார் என்பதனை மிகவும் ஆழ்ந்த கவலையுடன் அறியத் தருகின்றோம்.
இதன் பின்பு 12மணியளவில் உயர்ந்தபுரம் என்ற இடத்திலிருந்து புறப்பட்டு வந்த கறுப்புச் சட்டைய
ணிந்த கூலிப் படையினரின் மேல் எம்மவர்கள் தாக்குதல் நடாத்தியதில் 2பேர் ஸ்தலத்திலேயே
கொல்லப்பட்டனர்.இதனைத் தொடர்ந்து ராணுவத்தினர் முகாமுக்குள் பின்வாங்கி விட்டனர்.
இன்று 6ம் கட்டை என்னுமிடத்தில் ராணுவத்தினர் 8பொதுமக்களைச் சுட்டுக்கொன்றும் 2வீடுகளை
உடைத்துமுள்ளனர்.
ஆனையிறவு முகாமில் உள்ள ராணுவத்தினர் கிளிநொச்சிப் பகுதியில் இருந்து வரும் வாகனங்கள்
அனைத்தையும் கிளிநொச்சி ராணுவ இணைப்பு அதிகாரியிடம் உத்தரவுப் பத்திரம் பெற்று வருமாறு
பணித்துள்ளனர்.இதனால் ஒரு வாகனமும் யாழ்ப்பாணம் செல்ல அனுமதிக்கப் படவில்லை.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் விடுதலைப்புலிகளின் இராணுவ,அரசியல் கொள்கைகளைப்
---------------------------------------------------------------------
பற்றித் தெளிவான விளக்கங்களை அறிய விரும்புவோர்,இதுபற்றிய தமது கேள்விகளை எமது
---------------------------------------------------------------------
காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கவும்.உங்கள் கேள்விகளுக்கான விளக்கங்கள் எமது பிரசுரங்
---------------------------------------------------------------------
களில் பிரசுரிக்கப்படும்.
---------------

அனுப்ப வேண்டிய முகவரி:-


SOLT (U.K.)
254 GREEN STREET
LONDON E7 8LF UNITED KINGDOM
TEL: 01-475 0356


"புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்"